# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC.No. 64/2020**

**Deposition of Witness for PW5**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | கோட்டையன் | Caste | : |
| Father/Husband Name | : | கருப்பத்தேவர் | Calling | : |
| Village | : | மானூத்து | Religion | : |
| Taluk | : | | Age | : |

**( Accused present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 02.07.2026**

**முதல் விசாரணை**

நான் மானூத்தில் வசித்து வருகிறேன். கடந்த 2020ம் ஆண்டிற்கு முன்பு ஒருநாள் மாலை 5.30 மணியளவில் நான் உசிலம்பட்டியிலிருந்து எனது வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது காராம்பட்டி வளைவில் விபத்து ஏற்பட்டிருந்தது. நான் சென்று பார்த்தபோது லாரியும், ஆட்டோவும் அடிபட்டிருந்தது. காயம்பட்டவர்கள் யாரும் இல்லை. அவர்களை உசிலம்பட்டி, அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கேள்விப்பட்டேன். மற்ற விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 25.10.2019ம் தேதி நான் உசிலம்பட்டியிலிருந்து எனது வீட்டிற்கு சென்றுக்கொண்டிருந்தபோது காராம்பட்டி விலக்கு அருகே TN 58 W 8014 என்ற ஷேர் ஆட்டோ உசிலம்பட்டியை நோக்கி சென்றுக்கொண்டிருந்தது. அப்போது எதிரே TN 01 H 2925 என்ற லாரியை அஜாக்கரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி வந்த எதிரி மேற்படி ஷேர் ஆட்டோ மீது மோதி விபத்து ஏற்பட்டு, அதில் பலர் காயப்பட்டனர் என்றும், சிகிச்சை பலனின்றி 7 நபர்கள் இறந்துவிட்டார்கள் என்றும் போலீசார்

விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.